6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

13. (i) *19-5-2004* ஆம் நாளிட்ட தமிழக அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II *(1)/* வணிக வரி/*43* (b-*2*) */2004* ஆம் எண்ணுள்ள வணிக வரிகள் துறையின் அறிவிக்கையினை ரத்து செய்தும்; (ii) திருவாளர்கள் அசோசியேட்டட் சர்ஜிகல்ஸ் (இந்தியா) என்ற நிறுவனம், சென்னை-*3* இல் உள்ள அரசு பொது மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இதய நோய் மருத்துவ நிறுவனத்திற்கு *23-12-2000* ஆம் நாளிட்ட *1612/2000* ஆம் எண் பொருள்விவரப்பட்டி மூலம், எத்திலின் ஆக்ஸைடு ஸ்டெரிலைசர் என்கிற மருத்துவக் கருவி ஒன்றின் விற்பனை மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்கு அளித்தும், வணிக வரிகள் துறையின் *18-8-2004* ஆம் நாளிட்ட *139* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *(1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959) 53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

14. ஒன்றாம் விவர அட்டவணையின் D பகுதியின் *8* ஆம் பதிவின் கீழ் வரும் திரைப்படம் தொடர்பான உபகரணங்கள் மற்றும் திரைப் படப்பிடிப்பு நிலையங்கள், ஆய்வுக்கூடங்கள், ஒளி-ஒலிப்பதிவுக் கூடங்கள் ஆகியவற்றில் உள்ள திரைப்பட உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் ஒளி-ஒலிக்காட்சி மற்றும் செயற்கைக்கோள் உரிமைகளுக்கான குத்தகை ஆகியவற்றின் மீது *3-A* ஆம் பிரிவின்கீழ், வணிகர்கள் செலுத்தத்தக்க விற்பனை வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் *29-9-2004* ஆம் நாளிட்ட *150* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959) 53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

15. கோயம்புத்தூர், ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா தொழிற்பிரிவு மற்றும் பொறியியல் பள்ளி, மாணவர் குறிப்பேடுகளை தயாரித்து ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா நடத்தி வரும் கல்வி நிறுவனங்களுக்கு செய்யும் விற்பனை மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் *29-10-2004* ஆம் நாளிட்ட *169* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959) 53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

[2005 பிப்ரவரி 7

16. (i) 2-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள II/(1)/CT/55/2002 என்ற எண் கொண்ட அறிவிக்கையினை ரத்து செய்தும், (ii) சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்திலுள்ள சுங்கத் தீர்வையற்ற விற்பனைக் கடையில், தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் கடிகாரங்களின் விற்பனைக்காக திருவாளர்கள் கனிமங்கள் மற்றும் உலோகங்கள் வர்த்தக நிறுவனம் செலுத்தத்தக்க வரி, கூடுதல் வரி மற்றும் மேல் வரி ஆகியவைகளைப் பொறுத்தமட்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் தொடர்புடைய விதிகள் மற்றும் வழிகாட்டிக் குறிப்புகளுக்கிணங்க, விற்பனைத் தொகையை வெளிநாட்டு கரன்சியில் அல்லது அந்நியச் செலாவணியில் செலுத்த வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு வரி விதிப்பிலிருந்து விலக்களித்தும் வணிக வரிகள் துறையின் 19-10-2004 ஆம் நாளிட்ட 162 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழும் மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவின்கீழும் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

17. தமிழ்நாட்டு மீனவர்களுக்கு வழங்குவதற்காக, தமிழக அரசின் மீன்வளத் துறை இயக்குநருக்கு, பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் மேற்கொள்ளும் உயர்வேக டீசல் எண்ணெய் விற்பனைக்கு, செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து, வணிகவரித் துறையின் 29-10-2004 ஆம் நாளிட்ட 170 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

18. 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவி (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் 29-10-2004 ஆம் நாளிட்ட 338 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

19. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2005 பிப்ரவரி 7]

20. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

21. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

22. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

23. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

24. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

25. 2003-2004 ஆம் ஆண்டுக்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

26. 2003-2004 ஆம் ஆண்டுக்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் இருபதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

27. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் கணக்குகள் மற்றும் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

[2005 பிப்ரவரி 7

28. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

29. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. (1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

30. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

31. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தி ஆறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

32. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

27. 29-5-2003 ஆம் நாளிட்ட தமிழக அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரித் துறையின் II (1)/வணிக வரிகள்/30/(a-3)/2003 ஆம் எண் அறிக்கையில் திருத்தம் செய்து வணிக வரிகள் துறையின் 9-8-2004 ஆம் நாளிட்ட 125 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

28. 28-7-2004 ஆம் நாளன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற 2002-2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கையில் உள்ள பிழை திருத்தம்

2005 பிப்ரவரி 7]

29. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை (2003-2005)

30. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை (2003-2005)

31. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

32. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

*****

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS